**SC No.125/2018**

**எதிரிகள் 1, 2, 5 முதல் 7 ஆஜர். 4 மற்றும் 8வது எதிரி ஆஜரில்லை. 4 மற்றும் 8வது எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**சாட்சி பெயர்- திரு. ஜா. இளவரசன், த/பெ. திரு. ஜானகிராமன்**

**தேதி-14.11.2025**

**அ.சா. 16 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு அரசு தரப்பில் தொடர்ந்து முதல் விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி-**

நான் 11.08.2025 ல் இதற்கு முன்பு இந்த வழக்குச் சம்மந்தமாக முதல் விசாரணை அளித்தேன். அந்த முதல் விசாரணை விசாரணையில் 6 எண்ணிக்கையுள்ள கொம்புகளை கைப்பற்றியதாக கூறியுள்ளேன். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கொம்புகள் தான் அந்த கொம்புகள். அவை **சா.பொ.1 முதல் சா.பொ.6** வரையாக குறியீடுச் செய்யப்படுகிறது. அந்த கொம்புகளை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.32**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

அதே போல் 1வது எதிரி கிருஷ்ணனன் 27.08.2011ல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியில் ஒரு கத்தியை எடுத்துக் கொடுத்ததாக கூறியுள்ளார். அந்த கத்தி தான் தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கத்தி. அந்த கத்தி **சா.பொ.7**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. 2வது எதிரி மாரிமுத்து அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியில் ரத்தக் கறை படிந்த துவாரமுள்ள இரும்பு பைப் ஒன்றை எடுத்துக் கொடுத்ததாக கூறியுள்ளார். அந்த துவாரமுள்ள இரும்பு பைப் **சா.பொ.8**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

10.10.2011 அன்று அறுங்குணம் கிராம நிர்வாக அதிகாரி திரு. வெற்றிவேல் என்பவரை விசாரணை செய்த போது, சாட்சி சின்னக்கண்ணு மகன் செல்வராஜ்

என்பவருக்கு சொந்தமான நிலம் என்பதற்கு ஆதாரமாக அடங்கல், பட்டா, நில அனுபவச் சான்று, சர்வே எண்கள்.25/1, 26/2சி, 26/2ஜெ, 33/1பி, 17/6, புத்தகம் ஒன்று தொகுதி 584-ல் 355 முதல் 357 வரை பதிவாகிய தான செட்டில்மெண்ட் பத்திர நகலை ஆகியவற்றை திரு. வெற்றிவேல், கிராம நிர்வாக அதிகாரி என்பவர் என்னிடம் எடுத்து ஆஜர் செய்தார். வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டது.

பின்பு மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் சரண் அடைந்துவிட்டதால் 27.12.2011 அன்று சாட்சிகள் கண்ணன், லட்சுமிதேவி, செல்வராஜ், குமாரி ஆகியோர்களுக்கு வந்தவாசி அரசு மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிவு செய்து சிகிச்சை அளித்த மருத்துவர் நாகூர் மீரான், அரசு உதவி மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்பு, இறந்த கண்ணன் பிரேததத்தின் மீதான மருத்துவ பரிசோதனையை மேற்கொண்ட சென்னை தடய அறிவியல் மற்றும் மருத்துவம் சார்ந்த நிறுவன மருத்துவர் தண்டர்சீப் என்பவர் மருத்துவ பரிசோதனை சான்று வழங்கியும், 28.12.2011 அன்று விசாரணை செய்து இறப்பிற்கான காரணம் தலைக்காயம் என கூறியதை வாக்குமூலமாக பதிவு செய்தும், 29.12.2011 அன்று சாட்சி கண்ணன் என்பவரை சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக அனுப்பிய செங்கல்பட்டு மருத்துவக் கல்லூர் மற்றும் மருத்துவமனை மருத்துவர் ரவி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்பு சாட்சிகள் லட்சுமிதேவி என்பவருக்கு சிகிச்கை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கிய அரசு உதவி மருத்துவர் தர்மராஜன் என்பவரை விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன்.

பின்பு அதே தேதியில் சாட்சிகள் செல்வராஜ், குமாரி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்து அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என சான்று வழங்கிய செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மருத்துவர் பாண்டியன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன். பின்பு,

30.12.2011 அன்று இறந்த கண்ணன் பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய சென்னை தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர், திருமதி. மரியசெல்விரோசலின் என்பவரை விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன்.

பின்பு அதே தேதியில் இரத்தக் கறை படிந்த இரும்பு கத்தி மற்றும் இரும்பு பைப் ஆகியவற்றை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய இளநிலை தடய அறிவியல் அதிகாரி, திருமதி. தாரா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன். அந்த தடய அறிவியல் துறை அறிக்கை **அ.த.சா.ஆ.33**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்பு அதே தேதியில் இரத்தக் கறை படிந்த வேட்டி, சட்டை, இறந்தவரின் இரத்தம் ஆகியவற்றை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய உதவி இயக்குநர், திருமதி. விமலா தியாகராஜன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன். அந்த தடய அறிவியல் ஆய்வு அறிக்கை **அ.த.சா.ஆ.34**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

12.08.2011 அன்று தெள்ளார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பிரசன்ன மாதவன், என்பவர் பிரேதத்தை மருத்துவரிடம் மருத்துவ பரிசோதனைக்கு அடையாளம் காட்டி உடல் உள்ளுறுப்புகள், இரத்தக் கறை படிந்த வேட்டி, சட்டை ஆகியவற்றை தனி அறிக்கை மூலம் கைப்பற்றினார். அந்த தனி அறிக்கையை என்னிடம் சமர்ப்பித்தார். தனி அறிக்கை மூலம் கைப்பற்றிய பொருட்களை படிவம்-95 மூலம் கைப்பற்றினார். அந்த படிவம் 95 **அ.த.சா.ஆ.35**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. மேற்படி அலுவலுக்காக அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன்.

31.12.2011 அன்று மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர், திரு. பிரசன்ன மாதவன் என்பவர் மேற்படி உடல் உள்ளுறுப்புகள், இரத்தக் கறை படிந்த கத்தி, இரும்பு பைப், இரத்தக் கறை படிந்த வேட்டி, சட்டை, இறந்தவரின் இரத்தம்

ஆகியவற்றை சென்னை இராசயன பரிசோதனை கூடத்திற்கு ஒப்புவித்தும், அறிக்கை பெற்றும் சென்னை அரசு பொது மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை சான்று பெற்றும், என்னிடம் ஒப்புவித்ததற்கான மறு வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன். பின்பு, 01.01.2012 அன்று இவ்வழக்கினை முதல் விசாரணை செய்த தெள்ளார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன்.

(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.